# 4-வது கூடுதல் மாவட்ட நீதிமன்றம், உடுமலைப்பேட்டை

**முன்னிலை : திரு.M.நம்பிராஜன்.,பி.ஏ,பி.எல்.,**
**4-வது கூடுதல் மாவட்ட நீதிபதி,**
**உடுமலைப்பேட்டை**

2025–ம் ஆண்டு ஜூன் மாதம் 29 – ம் நாள் செவ்வாய்கிழமை
திருவள்ளுவர் ஆண்டு 2056, விசுவாவசு வருடம் ஆடி திங்கள் 13–ம் நாள்

IA.No.2/2025

in

O.S.No.435/2022

1. சீனிவாசன்,
2. முத்தம்மாள்,
3. ரங்கநாயகி. ……… மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

//எதிர்//

S. விஜயலட்சுமி ……… எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு என் முன்னர் 21.07.2025 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.D.பிரபாகரன்., அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.K.சுப்பிரமணியன்., அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டும், ஆவணங்களை பரீசிலித்தும், இதுநாள்வரை இந்நீதிமன்றப் பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**<u>உத்தரவு</u>**

20.12.2024–ம் தேதியன்று, மனுதாரர்களுக்கு எதிராக ஒருதலைப்பட்சமாக பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை ரத்து செய்ய, குறித்த காலத்தில் மனு தாக்கல் செய்யாமல் ஏற்பட்ட 79 நாட்கள் காலதாமதத்தை மன்னித்து, இம்மனுவினை ஏற்றுக்கொள்ள கேட்டு, காலவரையரைச்சட்டம் பிரிவு 5–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2. மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்:–</u>**

**2.1)** தாவா சொத்துக்களை பொறுத்து, எதிர்மனுதாரர், மனுதார்களுக்கெதிராக விளம்புகை மற்றும் உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டு அசல் வழக்கு தாக்கல் செய்து, வழக்கில் 21.08.2024–ம் தேதியில்

எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்வதற்காக வாய்தா போடப்பட்டிருந்தது. மனுதாரர்கள் வேறு வேறு ஊர்களில் உள்ளதால், ஒன்றுசேர்ந்த வழக்கைப் பற்றி கலந்து ஆலோசிக்க முடியவில்லை. குழந்தைகளின் படிப்பையும், உடல்நலத்தையும் கவனித்துக்கொண்டு வருவதால், மேற்படி வழக்கைப் பற்றி தெரிந்து கொள்ளவும், ஒருவருக்கொருவர் சந்தித்த தாவா சொத்தை பற்றி ஆராய்ந்து பேசவும் தகுந்த காலம் கிடைக்கவில்லை. மனுதாரர்கள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததால், மனுதாரர்கள் மீது 20.12.2024–ம் தேதியன்று ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. ஒருதலைபட்ச தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை ரத்து செய்ய மனுதாரர்களால் மனு தாக்கல் செய்ய முடியாமல் போய்விட்டது. மனுதாரர்கள் வேண்டுமென்றோ, அல்லது அஜாக்கிரதையாகவோ குறித்த காலத்தில் மனுக்கொடுக்காமல் இருக்கவில்லை. எனவே, குறித்த காலத்தில் தாக்கல் செய்யாமல் ஏற்பட்ட 79 நாட்கள் காலதாமதத்தை மன்னித்து, மனுவினை கோப்பிற்கு எடுத்துக்கொள்ள வேண்டியது அவசியமும், நியாயமும் உள்ளது. அல்லாத பட்சம் மனுதாரர்களுக்கு பெருத்த கஷ்ட நஷ்டங்கள் ஏற்படும்.

**3. எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர் உரையின் சுருக்கம்:**

**3.1)** மனுதாரர்களின் மனு சட்டப்படியும் நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. எதிர்மனுதாரர் வெளிப்படையாக ஒப்புக்கொள்ளும் சங்கதிகளை தவிர மற்ற சங்கதிகளை மனுதாரர்களே கண்டிப்பாக நிரூபிக்க வேண்டும். உடுமலைப்பேட்டை சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.3/2022–ஐ வாதி, பிரதிவாதிகள் பேரில் தாக்கல் செய்துள்ளார். மேற்படி அசல் வழக்கில் மனுதாரர்கள் தவறாமல் ஆஜராகி வருகிறார்கள். 1–ம் மனுதாரர் வாதியாக இருந்து சாட்சியம் அளித்து வருகிறார். மேற்படி இரண்டு வழக்குகளிலும் ஒரே வழக்கறிஞர் ஆஜராகி வருகிறார். பிரதிவாதிகள் 3 பேரும் சூழ்நிலை மற்றும் காலத்தின் காரணமாக ஆஜராக முடியவில்லை என்று சொல்லியுள்ளது ஏற்புடையதல்ல. தாமதமான ஒவ்வொரு நாட்களுக்கும் சரியான காரணம் கொடுக்கப்படவில்லை. மனுதாரர்களுக்கு விபரம் தெரிந்தே உரிய காலத்தில் மனு

தாக்கல் செய்யப்படவில்லை. எனவே, மனுதாரர்களின் இம்மனுவை எதிர்மனுதாரரின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும்.

4. இருதரப்பு வாதுரைகளையும் கவனமாக பரிசீலனை செய்து பார்க்கும் போது முடிவு செய்யவேண்டியது யாதெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா ? இல்லையா ? என்பதைக் காண்பதேயாகும்.

**5. தீர்வு:–**

**<u>6. மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு வாதுரையின் சுருக்கம்:–</u>**

மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வாதிடுகையில், இந்த மனுவின் மனுதாரர்கள் அசல் வழக்கில் 1 முதல் 3 பிரதிவாதிகள் ஆவார்கள் என்றும், எதிர்மனுதாரர்/வாதி தாவா சொத்தை பொறுத்து விளம்புகை மற்றும் உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றும், மனுதாரர்கள் வெவ்வேறு ஊர்களில் வசித்து வருவதால் வழக்கை பற்றி ஒன்று சேர்ந்து ஆலோசித்து உரிய காலத்திற்குள் எதிர்வழக்குரை தாக்கல் செய்யவில்லை என்றும், மேலும் மனுதாரர்கள் அவர்களின் குழந்தைகளின் படிப்பையும், உடல் நலத்தையும் கவனித்து கொண்டு உரிய காலத்தில் ஒன்று கூடி ஆலோசனை செய்து, எதிர்வழக்குரை தாக்கல் செய்ய முடியவில்லை என்றும் எனவே, இந்நீதிமன்றம் கடந்த 20.12.2024–ல் ஒருதலைப்பட்ச தீர்ப்பாணை பிறப்பித்துள்ளது என்றும், மேற்படி ஒருதலைப்பட்ச தீர்ப்பாணையை ரத்து செய்ய வேண்டுமென்றும் மனுதாக்கல் செய்யவேண்டுமென்றும் மனுதாக்கல் செய்வதற்கு 79 நாட்கள் காலதாமதமாகிவிட்டது என்றும் மேற்படி காலதாமதத்தை மன்னிக்கவேண்டுமென்றும், இந்த மனுவை மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ளார்கள் என்று வாதிடப்பட்டது.

**<u>7. எதிர்மனுதாரர்/வாதி தரப்பு வாதுரையின் சுருக்கம்</u>:–**

எதிர்மனுதாரர்/வாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வாதிடுகையில், மனுதாரர்கள்/பிரதிவாதிகள் உடுமலைப்பேட்டை சார்பு நீதிமன்றத்தில் எதிர்மனுதாரர்/வாதிக்கு எதிராக அசல் வழக்கு எண். 3/2022 தாக்கல் செய்துள்ளார்கள். மேற்படி வழக்கில் மனுதாரர்கள் தவறாது ஆஜராகி வழக்கை

நடத்தியுள்ளார்கள். 1–ம் மனுதாரர் மேற்படி வழக்கில் வாதி தரப்பு சாட்சியாக விசாரணை செய்யப்பட்டுள்ளார். மேற்படி வழக்கில் ஆஜரான மனுதாரர் இந்த வழக்கில் தெரிந்தே முன்னிலையாகாமல் இருந்துள்ளார்கள் என்றும் காலதாமத்திற்கான காரணத்தை சரியாக மனுவில் தெரிவிக்கவில்லை. எனவே, மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென்று வாதிட்டார்.

**<u>8. தரப்பினர்களின் கோரிக்கைக்கான பரிசீலனை:–</u>**

இருதரப்பு வாதுரைகளையும், ஆவணங்களையும் கவனமாக பரிசீலனை செய்கையில், எதிர்மனுதாரர்/வாதி, பிரதிவாதிகள்/மனுதாரர்கள் ஆகியோர்களுக்கு எதிராக தாவா சொத்தை பொறுத்து விளம்புகை மற்றும் உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளது தெரியவந்துள்ளது. மேற்படி வழக்கில், பிரதிவாதிகள்/மனுதாரர்கள், எதிர் வழக்குரை தாக்கல் செய்யாததால், கடந்த 21.08.2024–ல் ஒரு தலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள விபரம் தெரியவந்துள்ளது. பின்னிட்டு, மேற்படி வழக்கை பொறுத்து 20.12.2024–ல் ஒருதலைபட்ச தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ள விபரம் தெரியவந்துள்ளது. மனுதாரர்கள் தரப்பில் வெவ்வேறு ஊர்களில் மனுதாரர்கள் வசிப்பதாலும், அவர்களுடைய குழந்தைகளின் படிப்பையும், உடல் நலத்தையும் கவனித்து வருவதால், உரிய காலத்திற்குள் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய முடியவில்லை என்று தெரிவித்துள்ளார்கள். தீர்ப்பாணையை ரத்து செய்ய 79 நாட்கள் காலதாமதமாகிவிட்டதாகவும், அதை மன்னிக்கும்படி மனுதாக்கல் செய்த விபரம் தெரியவந்துள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில், மனுதாரர்கள் இவ்வழக்கின் வாதியான எதிர்மனுதாரருக்கு எதிராக உடுமலைப்பேட்டை சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.3/2022 –ஐ தாக்கல் செய்து, அதில் 1–ம் மனுதாரர் முன்னிலையாகி வாதி தரப்பு சாட்சியாக விசாரணை செய்யப்பட்டு, வழக்கை தொடர்ந்து நடத்தி வருகிறார் என்றும் இந்த வழக்கை வேண்டுமென்றே காலதாமதப்படுத்தும் நோக்கத்தோடு முன்னிலையாகவில்லை என்று தெரிவித்துள்ளார்கள். எதிர்மனுதாரர் தரப்பில் மனுதாரர்கள் இந்த வழக்கு வாய்தா காலக்கட்டத்தில், மேற்படி அசல் வழக்கு எண்.3/2022 –ல் முன்னிலையானார்கள் என்று எவ்வித ஆவணங்கள் கொண்டும், சாட்சிகள் கொண்டும் இந்த மனு விசாரணையில்

முன்னிலைப்படுத்தவில்லை. எனவே, எதிர்மனுதாரர் தரப்பு வாதம் ஏற்றுக்கொள்ளதக்கதல்ல என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. மேலும், இருதரப்பினர்களிக்கிடையேயான உண்மையான பிரச்சனையை தீர்க்கும் பொருட்டும், நீதியின் நலனை கருத்தில் கொண்டும், கீழ்கண்ட நிபந்தனைகளின் அடிப்படையில் இந்த மனுவை அனுமதிக்கலாம் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**இறுதியாக,** எதிர்மனுதாரருக்கு, மனுதாரர்கள் ரூ.2000/–ஐ 8.08.2025–ம் தேதிக்குள் செலுத்தும்பட்சம் இந்த மனு அனுமதிக்கப்படும் என்றும், தவறும் பட்சம் அதனை தள்ளுபடி செய்யப்படும் என்று உத்தரவிடப்படுகிறது. அழைக்க 11.08.2025

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2025–ம் ஆண்டு ஜூலை மாதம் 29–ம் நாள் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

ஒம்/–திரு.M.நம்பிராஜன்.,
4–வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை

**<u>மனுதாரர்கள் தரப்பிலும் சாட்சிகள் மற்றும் ஆவணங்கள்:– இல்லை</u>**

**<u>எதிர்மனுதாரர் தரப்பிலும் சாட்சிகள் மற்றும் ஆவணங்கள்:– இல்லை</u>**

ஒம்/–திரு.M.நம்பிராஜன்.,
4–வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை

FAIR/DRAFT ORDER
In
IA.No.2/2025
in
OS.No.435/2022
Date:29.07.2025
IV$^{th}$ ADJ Udt